பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம்பி

மலர்: 16] சென்னை: மார்கழி 5 (19—12—68) வியாழன் ★ வெளியூர்: மார்கழி 6 (20—12—68) வெள்ளி [இதழ்: 154

பிச்சைக்காரர் விடுதிக்கு மானிய உயர்வு

திருச்சி, டிச. 19 —
நகராட்சிகள் நடத்திவரும் பிச்சைக்காரர்கள் விடுதிக்கான மானியத்தைத் தமிழக அரசு அதிகரித்திருக்கிறது.

ஒவ்வொரு பிச்சைக்காரருக்கும் மாதமொன்றுக்கு தற்போது ரூ. 10 அளிக்கப்பட்டு வருகிறது; இது இப்போது ரூ. 14 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

நிர்வாகம் சீர்மைபெறப் புதிய ஏற்பாடு

மாவட்டந்தோறும் குழுக்கள் அமையும்

அதிகாரிகள் — ஊழியர் பிரதிநிதிகள் உறுப்பினர்களாவர்

திருச்சி, டிச. 19—
அரசு அதிகாரிகள் — ஊழியர்கள் ஆகியவர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட 'மாவட்டக் குழு'க்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைப்பதற்குத் தமிழக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

பொதுப் பணிகளில் திறமையை அதிகப்படுத்துவதும், ஊழியர்கள் நலனும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும். சனவரி 1-ம் நாள் முதல் இக்குழுக்கள் செயல்படத் துவங்கும்.

அதிகாரிகளும், ஊழியர்களும் ஒன்றுகூடி வட்டாரக் குறைபாடுகள் பற்றி விவாதிப்பதற்கும், நிர்வாகச் சீரமைப்புக்கான நடவடிக்கைகளை வகுப்பதற்கும் 'மாவட்டக் குழு'க்கள் பயனுள்ளதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வட்டாரப் பிரச்சினைகள், குறைகள் பற்றி மட்டுமே மாவட்டக் குழுக்கள் கவனிக்கும்; ஊதிய உயர்வு போன்ற அதிக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள், மாநில அளவில் பரிசீலனைக்கு உரியவை; அவற்றைக் குழுக்கள் எடுத்துக்கொள்ளா.

சென்னை நகரம் நீங்கலாக ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு குழு இருக்கும்.

ஒரு மாவட்டக் குழுவில் 12 உறுப்பினர்கள் இருப்பார்கள்; 6 பேர் ஊழியர்களின் பிரதிநிதிகள்; அதிகாரிகளின் சார்பில் 6 பேர், மாவட்டக் கலெக்டர், அவர்களை நியமிப்பார்.

கலெக்டர் தலைவராகவும், அவருடைய நேர்முக உதவி அலுவலர் (பொது) செயலாளராகவும் இருப்பார்கள்.

ஊழியர் பிரதிநிதிகள் 6 பேரில், அங்கீகாரம் பெற்ற சங்கங்களிலிருந்து 5 பேரும், கடைநிலை அரசு ஊழியர் சங்கத்திலிருந்து ஒருவரும் இருப்பார்கள்.

அந்த 5 பேரில் — ரெவினியூ, பொதுப்பணித் துறை, விவசாயம், வணிக வரித் துறையிலிருந்து 5 பேர் இருப்பர்; மீதமுள்ள ஒருவர் இந்தப் பட்டியலில் இடம்பெறாத அரசுத்துறைகளில் ஒன்றிலிருந்து ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படுவார்.

சனவரி 1-ம் நாள் செயல்படத் துவங்கும் குழுக்கள், 1969 இறுதி வரையில் பணியாற்றும்.

இந்திய எல்லையில் செஞ்சீனப் படைகள்

மக்களவையில் அமைச்சர் தகவல்

புதுடில்லி, டிச. 19—
"இதுவரையில் செஞ்சீனா, 120 அணுகுண்டுகளையும், நீர்வளிக் குண்டுகளையும் தயாரித்திருக்கிறது.

"ஆண்டுக்கு 40 அணுகுண்டுகளைத் தயாரிக்கும் வசதி, இப்போது செஞ்சீனாவிடம் இருக்கிறது.

"2,000 மைல் பறந்து சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகளையும் சீனா தயாரித்திருக்கிறது; அவைகள் எங்கே வைக்கப்பட்டுள்ளன என்பது தெரியவில்லை.

'இந்தியாவின் வடஎல்லையில் செஞ்சீனா, 13 டிவிஷன்கள் முதல் 16 டிவிஷன்கள் வரை தனது படைகளை நிறுத்திவைத்திருப்பதாகத் தெரியவருகிறது"

என்ற தகவல்களை, மக்களவையில் பாதுகாப்புத் துறை அமைச்சர் சுவரண்சிங், கேள்வி நேரத்தின் போது தெரிவித்தார்.

ஊராட்சி மன்ற ஊழியர்கள் ஊதியம்

மாற்றியமைக்க அரசு ஆய்வு

நாகர்கோவில் டிச. 18 —
"தமிழகத்தில் ஊராட்சி ஊழியர்களின் ஊதிய விகிதங்களை மாற்றியமைப்பது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது"

என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள், ஊராட்சி வளர்ச்சித் துறை ஊழியர்கள் அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு

மத்திய ஊதியக் குழு பரிந்துரை

பம்பாய், டிச. 19—
"ஊதியத்துக்கும்—உற்பத்திக்கும் நல்ல தொடர்பு இருக்கும் பொருட்டு, பஞ்சாலைத் தொழிலாளர்களின் இப்போதைய கிராக்கிப் படியில் பாதியை அடிப்படைச் சம்பளத்துடன் இணைக்க வேண்டும்"

என்று பஞ்சாலைத் தொழிலுக்கான இரண்டாவது மத்திய ஊழியக் குழு பரிந்துரை செய்திருக்கிறதாம்.

இப்போது ஒரு தொழிலாளிக்குக் கிடைக்கும் மொத்தச் சம்பளத்தில் ஒரு சிறு பகுதிதான், அடிப்படை ஊதியமாக இருக்கிறது; சராசரியாக ஒரு தொழிலாளியின் ஊதியம் இப்போது ரூ. 200 ஆகும்.

பல்வேறு தொழிற்சாலைகளிடையே கிராக்கிப் படியில் காணப்படும் ஏற்றத் தாழ்வைப் படிப்படியாகக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு ஒரு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறதாம்.

(5-ம் பத்தி தொடர்ச்சி)

நிறைவேற்றப்பட்டுவிட்ட இந்த மசோதா மாநிலங் களவையின் ஆய்வுக்குச் செல்லும். இன்றியமையா ஊழியங்கள் எவை என்பதை மசோதா விளக்குகிறது தபால் — தந்தி, டெலிபோன், இரயில்வே, சிவில் விமானப் போக்குவரத்துடன் சம்பந்தமுள்ளவைகள், துறைமுகப் பணிகள், நாணயம் தயாரிக்கும் தொழிற்சாலை, பாதுகாப்பு, மத்திய அரசின் விவகாரங்களுடன் சம்பந்தப்பட்ட பணிகள் இதில் அடங்கும்.

'ஓவர் டைம்' செய்ய மறுப்பதும் வேலை நிறுத்தமாகும் என்று கூறுகிறது.

ஒரு தனி உத்தரவு மூலம் வேலை நிறுத்தத்தைத் தடை செய்ய அரசினர், அதிகாரம் எடுத்துக்கொண்டுள்ளனர். இந்த உத்தரவு 6-மாதம் அமுலில் இருக்கும்.

இன்றியமையாப் பணித் துறையைச் சேர்ந்த ஒரு ஊழியர் சட்ட விரோதமாக வேலை நிறுத்தம் செய்தால் 6-மாதம் சிறைத் தண்டனை அல்லது ரூ. 200 அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படுவார்.

வேலை நிறுத்தம் செய்யும்படி நிர்ப்பந்திக்கும் அல்லது தூண்டும் ஊழியருக்கு ஓராண்டு சிறைத் தண்டனை அல்லது ரூ. 1000 அபராதம் விதிக்கப்படும்.

சட்ட விரோதமான வேலை நிறுத்தத்திற்குப் பணம் கொடுத்து தூண்டுபவர்களுக்கும் இம்மாதிரி தண்டனை வழங்கப்படும்.

இம்மசோதாவின்கீழ் குற்றம் செய்திருப்பதாகச் சந்தேகிக்கப்படும் எவரையும் வாரண்டில்லாமல் ஒரு போலீசு அதிகாரி கைது செய்யலாம்.

பண்டிகை இனும் வாங்கும் அஞ்சல்ஊழியர்கள்

நடவடிக்கைக்கு உள்ளாவர்

புதுடில்லி, டிச. 19—
"பண்டிகைகளின் போதோ, மற்ற நிகழ்ச்சிகளின்போதோ பொதுமக்களிடமிருந்து இனுமோ வேறு பொருள்களோ கோரும் அஞ்சல் — தந்தி ஊழியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்"

என்று அஞ்சல் — தந்தித் துறை ஆணை பிறப்பித்துள்ளது.

"இந்தப் பழக்கத்தை ஒழிப்பதில் பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்; இத்தகைய நிகழ்ச்சிகளைச் சம்பந்தப்பட்ட அஞ்சல் — தந்தி நிலையத் தலைமை அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும்"

என்று, அஞ்சல் — தந்தித் துறைத் தலைமை இயக்குநர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அரசியல் சட்ட இந்தி மொழிபெயர்ப்பு அதிகாரபூர்வமானதல்ல!

இந்தி வெறியர்கள் கோரிக்கை புதிய சிக்கலை உண்டாக்கும்!

மத்திய இந்திக் குழுவில் இந்திரா காந்தி — சவான் — மொரார்ஜி அறிவிப்பு

புதுடில்லி, டிச. 19—
"அரசியல் சட்டத்தின் இந்தி மொழி பெயர்ப்பை அதிகாரபூர்வமான மொழிபெயர்ப்பாக நீதிமன்றங்கள் ஏற்க வேண்டுமா என்பது பற்றி மத்திய அரசு பரிசீலனை செய்யும்.

"இந்தி மொழி பெயர்ப்பை அதிகாரபூர்வமானதாகச் செய்வதால் புதிய சிக்கல்கள் எழும்; எனவே அவற்றைப் பற்றி உன்னிப்பாக யோசித்து முடிவு செய்ய வேண்டும்"

என்று மத்திய உள்துறை அமைச்சர் ஒய். பி. சவான், மத்திய இந்திக் குழுவில் பேசுகையில் தெரிவித்தார்.

"அரசியல் சட்டம் — குற்றத் தடுப்பு, மற்றுமுள்ள சட்டங்கள் ஆகியவற்றின் இந்தி மொழி பெயர்ப்பையே அதிகாரபூர்வமானதாகச் செய்யவேண்டும்" என்று இந்திக் குழுவின் உறுப்பினர்கள் எழுப்பிய கோரிக்கைக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கூறினர்.

இப்போது ஆங்கில மொழியில் உள்ள சட்டங்களே அதிகாரபூர்வமானதாகக் கருதப்படுகின்றன.

"அரசியல் சட்டத்தைப் பற்றி ஏதேனும் ஐயப்பாடு எழுந்தால், ஆங்கிலத்தில் உள்ள சட்டப் பிரதியை நம்புவதா அல்லது இந்தி மொழி பெயர்ப்பை நம்புவதா?" என்று கேட்கப்பட்டது; கூட்டத்தில் கலந்துகொண்ட துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் இதற்குப் பதிலளிக்கையில்,

"இப்போது ஆங்கிலத்தில் உள்ள சட்டங்களே அதிகாரபூர்வமாக கருதப்படுகிறது; இந்தி மொழி பெயர்ப்பை அதிகாரபூர்வமாகச் செய்ய வேண்டுமென்றால் அதற்குச் சட்டத்தில் மாறுதல் செய்ய வேண்டும்" என்றார்.

'ஆங்கிலச் செய்தி நேரத்தில் மாறுதல் செய்துள்ளதே கிளர்ச்சியை ஏற்படுத்திவிட்டிருக்கிறது; எனவே இதுபற்றி ஆழ்ந்து யோசிக்க வேண்டும்"

என்று, தலைமையமைச்சர் இந்திரா காந்தி தெரிவித்தார்.

"மைசூர் மாநிலத்தில், இந்திப் பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்தவேண்டும்" என்று காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா தெரிவித்த யோசனையை இந்திக் குழு வரவேற்றது.

"நாடாளுமன்றத்தில் மசோதாக்களைக் கொண்டுவரும்போது அவற்றை இந்தியிலேயே கொண்டு வரவேண்டும்" என்று பிரகாஷ்வீர் சாஸ்திரி கூறினர்.

அரசு ஊழியர்களின் உரிமைபறிக்கும் மசோதா

கடும் எதிர்ப்புகளுக்கிடையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றம்

மசோதாவின் பிரதிகள் கிழித்தெறியப்பட்டன — கண்டன முழக்கமிட்டு எதிர்க்கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர்

புதுடில்லி, டிச. 18—
மத்திய அரசு ஊழியர்களின் வேலை நிறுத்த உரிமையைப் பறிக்கும் மசோதா இன்று நாடாளுமன்ற மக்களவையில் கடும் எதிர்ப்புக்கிடையே நிறைவேறியது.

மசோதா நிறைவேறும்போது எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அவையில் இல்லை; நிறைவேறுவதற்கு முன்னதாகவே அவர்கள் எதிர்ப்பு முழக்கமிட்டவாறு வெளியே சென்றுவிட்டனர்.

இந்த வெளிநடப்பில் வலது—இடது கம்யூனிஸ்டுக் கட்சிகள் பி. சோ., தி. மு. க. ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மசோதாவின் நகல்கள் கிழித்தெறியப்பட்டன.

(1-ம் பத்தி பார்க்க)

கோவில் படிக்கட்டுகளில் உள்ள கல்வெட்டுக்கள்

எடுத்துப் பத்திரமாகப் பாதுகாக்க நடவடிக்கை

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அறிவிப்பு

இதுவரையில் 25,000 கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்

சென்னை, டிச. 19—

"கோவில்களிலுள்ள கல்வெட்டுகளைத் திரட்டி, அந்தந்தக் கோவில்களிலேயே தனியாக வைத்துப் பாதுகாக்கும்படி இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறை கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது"

என்று, கல்வியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அறிவித்தார்.

தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு. இரா. நாகசாமி எழுதிய 'மாமல்லை' என்ற நூல் வெளியீட்டு விழா, மவுண்ட் ரோடு சிறுவர் அரங்கில் நடைபெற்றது; அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விழாவுக்குத் தலைமைதாங்கி நூலையும் வெளியிட்டுப் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"பல கோவில்களில் பண்டைக் கல்வெட்டுக் கற்கள் நடைபாதைகளாகப் பயன்பட்டு வருகின்றன; இதனால், கல்லில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் மறைந்து வருகின்றன.

இத்தகைய கல்வெட்டுக் கற்கள் நடைபாதைகளாக இருந்தால், அவைகளை அகற்றிப் பத்திரமாகக் கோவில்களிலேயே பாதுகாக்கும்படி அறநிலையத் துறையினரைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

தஞ்சையில் கலைக் கண்காட்சி நடத்தப்படுகிறது; இதன்மூலம் வருகின்ற ரூ. 25,000-த்தை சரஸ்வதி மகால் நூல் நிலையப் பராமரிப்புக்குப் பயன்படுத்திக் கொள்ளும்படி தஞ்சை மாவட்ட கலெக்டருக்குத் தெரிவித்திருக்கிறேன்.

மேலைநாடுகளில் வரலாறு, இலக்கியம், கல்வெட்டுக்கள், கலை ஆகியவற்றின் அடிப்படையில், எண்ணற்ற வியப்புக்குரிய நூல்கள் அந்தந்த நாட்டின் சிறப்பை வெளிப்படுத்தும் முறையில் வெளியிடப்படுகின்றன. வரலாற்றில் பெருமை வாய்ந்த கலைச் சொற்கள், சொல்வளங்களைக் காணச் செல்வதற்குமுன், அவை பற்றிய நூல்களைப் படித்துவிட்டுச் செல்கின்றனர். மேலை நாடுகளில் பரவியுள்ள இந்தப் பழக்கம் நம் நாட்டிலும் வளர்ந்தால்தான் நம் கலைச் செல்வங்களின் அருமை பெருமைகளை உணர முடியும்.

தமிழகத்தில் அப்படிப்பட்ட நூல்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதுதான் தமிழக அரசின் பேரவாவாகும். அந்த ஆவலை நிறைவேற்றும் வகையில், தொல்பொருள் ஆய்வுத் துறையினர் எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவுதான் 'மாமல்லை' என்னும் இந்த நூல்.

இனிய--எளிய தமிழில் இலக்கிய நயத்தோடு இந்நூலை எழுதியுள்ள திரு. நாகசாமி பாராட்டுக்குரியவராவார்."

நூலாசிரியர் திரு. நாகசாமி தமது வரவேற்புரையில் கூறியதாவது:—

"பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் அரண்மனையையும் அந்தப்புர மாளிகையையும், மற்றும் பல பொருள்களையும் தொல்பொருள் துறையினர் கண்டுபிடித்து அவற்றைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சங்க காலப் புகழ் பெற்ற சிறந்த துறைமுகமான கொற்கையிலும் அகழ்வராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தமிழகக் கோயில்களில் இதுவரை 25,000 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் படி எடுத்து அச்சிடும் வேலையில் தொல் பொருள் துறையினர் ஈடுபட்டுள்ளனர்."

அமைச்சர் நெடுஞ்செழியனிடமிருந்து முதல் நூலைப் பெற்றுக்கொண்ட முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதன், தமது சிறப்புரையில், திரு. நாகசாமியின் முயற்சியைப் பாராட்டினர்.

ஆறுகளை இணைக்க இயலாதாம்!

டெல்லி அமைச்சர் கூற்று

புதுடில்லி, டிச. 18—

"நாட்டிலுள்ள ஆறுகளை — கங்கைமுதல் வைகைவரை-- இணைப்பது இயலக்கூடியதன்று"

என்று மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ், நாடாளுமன்ற மேலவையில் கூறினர்.

இது தொடர்பாக உறுப்பினர் ஒருவர் கூறிய யோசனையை அவர் நிராகரித்துக் கூறியதாவது:—

"பல்வேறு ஆறுகளின் போக்கைச் சித்தரிக்கும் 'மாதிரி' ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது; வரவு—செலவுக் கூட்டத் தொடரில் அதைப் பார்த்துவிட்டு பிறகு கருத்து வெளியிடுமாறு உறுப்பினர்களைக் கேட்டுக் கோள்கிறேன்."

தமிழக மக்களின் கோரிக்கை புறக்கணிப்பு

கண்ணகி, பாரதிதாசன் உருவங்களை அஞ்சல்தலையில் பொறிக்க மறுப்பு

டில்லி அமைச்சருக்கு நாடாளுமன்ற தி. மு. கழக உறுப்பினர் தெய்வீகன் கண்டனக் கடிதம்

புதுடில்லி, டிச. 19—

நாடாளுமன்ற தி. மு. க. உறுப்பினர் மு. தெய்வீகன் (கள்ளக்குறிச்சி), மத்திய அரசின் அஞ்சல்துறை அமைச்சர் திரு. இராம் சுபாக் சிங்குக்கு எழுதியுள்ள கடிதத்தில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கண்ணகி ஆகியோரின் உருவங்களை அஞ்சல்தலையில் வெளியிட டெல்லி மறுத்துவிட்டது குறித்துக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

திரு. தெய்வீகன் தமது கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:—

"தமிழகத்தின் தலைசிறந்த கவிஞரான புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் உருவத்தையும், கற்புக்கரசி கண்ணகியின் உருவத்தையும் அஞ்சல் தலையில் வெளியிடவேண்டும் என்று முன்பே தங்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன்.

"1969-ஆம் ஆண்டில் வெளிவரவிருக்கும் புதிய அஞ்சல் தலைகளின் விவரத்தை அஞ்சல் துறை அறிவித்துள்ளது; அதில், பாரதிதாசன் -- கண்ணகி பெயர்கள் காணப்படவில்லை. இது பெரிய ஏமாற்றத்தையும், வருத்தத்தையும் தெரிவித்துள்ளது.

"தமிழக அரசின் கோரிக்கையையும் தமிழ் மக்களின் வேண்டுகோளையும் அஞ்சல் துறை அலட்சியப்படுத்திவிட்டது.

"அஞ்சல் துறை தனது முடிவை மறுஆய்வு செய்து, பாரதிதாசன் -- கண்ணகி உருவங்களை அஞ்சல் தலையில் பொறிக்க ஆவன செய்ய வேண்டும் என மீண்டும் வேண்டிக்கொள்கிறேன்."

மாணவர்கள் பிரச்சினை தீர வழி

கல்வியமைச்சரின் யோசனை

சென்னை, டிச. 18—

"மாணவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு, மாணவர்கள் மட்டுமே உள்ள மன்றத்திடமே விட்டுவிடுவது நல்லதென நினைக்கிறேன்.

"அதுபோன்ற மன்றத்தை எப்படி அமைப்பது? ஊருக்கு ஒன்றாக அமைப்பதா அல்லது கல்வி நிலையத்துக்கு ஒன்றாக அமைப்பதா?—என்பது பற்றிய விவரங்களைக் கல்லூரித் தலைவர்கள், தலைமை ஆசிரியர்கள், மாணவர் பிரதிநிதிகளிடம் கலந்து பேசி அமைக்கலாம் என்றிருக்கிறேன்"

என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:—

"இதேபோன்று, ஒவ்வோர் ஊருக்கும் உள்ள பெற்றோர் சங்கத்தையும் மீண்டும் செயல்படுத்துவதன் மூலம் நல்ல பலன் கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன்.

"இந்த இரண்டு யோசனைகளையும் செயல்படுத்துவதன் மூலம் மாணவர்களுடைய பிரச்சினைகள் சுமுகமான முறையில் தீர்க்கப்படுவதுடன், நேரம் வீணாவதும் தவிர்க்கப்படும்; இன்னும் சிறந்த ஒழுக்கத்துக்கு இது நல்ல வழிகோலும்."

கானடா அரசு கைகொடுக்கிறது!

இந்தியாவுக்கு ரூ. 20 கோடி மதிப்புள்ள கோதுமை

புதுடில்லி, டிச. 17—

இந்தியாவின் தானியக் கையிருப்புக்களைப் பலப்படுத்தும் நோக்கத்துடன் ரூ. 20.811 கோடி மதிப்புள்ள 1.5 கோடி புஷல் கோதுமையை வழங்கக் கானடா முன்வந்திருக்கிறது.

"கூடிய விரைவில் இக்கோதுமை, கானடாவின் துறைமுகங்களிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதியாகும்" என்று, கானடாவின் நாடாளுமன்றத்தில் வெளிநாட்டுத் துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

அண்ணா சிகிச்சை நிதி

திருச்சி மாவட்டத்தில் அளிக்கப்பட்ட தொகை விவரம்

திருச்சியில் 12—12—68 அன்று நடைபெற்ற அறிஞர் அண்ணா சிகிச்சை நிதியளிப்புக் கூட்டத்தில் கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்களிடம் நிதியளித்த தோழர்கள்—அமைப்புக்களின் விவரம் இங்கு வெளியிடப்படுகிறது. (மொத்தத் தொகை 14-12-68 அன்று வெளியிடப்பட்ட நிதி வரவுக் கணக்கு விவரத்தில் சேர்க்கப்பட்டுவிட்டிருக்கிறது):—

திருச்சி மாவட்டச் செயலாளர் திரு. அன்பில் தருமலிங்கம் அவர்களால் மாவட்டக் கழகச் சார்பாக அளிக்கப்பட்ட தொகை	12,000.00
ஜி. பராங்குசம் எம்.எல்.சி.	250.00
எம். சந்தசாமி எம்.எல்.ஏ.	250.00
பி. எஸ். முத்துச்செல்வன் எம்.எல்.ஏ.	251.00
திருச்சி நாதன் கம்பெனி—பா. பாண்டுரங்கன்	201.00
குளித்தலை-கடம்பர்கோவில் டைலர் சுந்தரம் மூலம்	101 00
கரூர் 12-வதுவட்ட தி மு.க.	120.00
10 ,, ,,	106.00
6 ,, ,,	51.00
11 ,, ,,	87.50
9-வது வட்ட பிரதிநிதி அம்மையப்பன்	50.00
வைத்திலிங்கம்	101.00
க. பரமத்தி வி. சின்னையன்	51.00
13-வது வட்டம் எஸ். சுப்பிரமணியம்	53.00
5-வது வட்டம்	51.00
கரூர் தொழிலாளர்கள் சார்பில்	61.00
கரூர் தோழர்கள்—	
என்.ஆர்.எம். பத்மனுபன்	101.00
எம். குழந்தைவேல்	101.00
காஸ்மாபாலிடன் கிளப்	101.00
மனோகரா ஓட்டல் இராமசாமி	101 00
பெரியார் உணவு விடுதி நல்லுசாமி	101.00
சுந்தர விலாஸ் ஓட்டல் எம். பகவதி	101.00
எம். இராமலிங்கம் பிள்ளை	101.00
கடவூர் யூனியன் தலைவர் வி. பி. சாமிநாதன்	101.00
வெல்லமண்டி வி. திருமலைசாமி நாயுடு	101.00
எஸ். அய்யாசாமி நாடார்	101.00
கே. வையாபுரி	101.00
எஸ்.ஜி ஆர். பிரதர்ஸ்	101.00
எம்.கிருஷ்ணசாமிகவுண்டர்	101.00
ஏ. வி. எஸ். அண்டு ஏ. வி. ஆர். மண்டி	101.00
சின்னப்பா ஜின்னிங் பாக்டரி — பாலசுப்பிரமணிய விலாஸ்	101.00
ஈ. பெரியசாமி	101 00
கே. கந்தசாமி	101 00
ஜி. கோவிந்தராசு	101 00
கே. எஸ். கந்தசாமி (பஞ்சு வியாபாரி, தேனி)	101.00
எஸ். நாராயணசாமி ஐயர்	50.00
எஸ். வேல்சாமி செட்டியார்	50.00
பரிசுச் சீட்டு ஏஜெண்டு ஆர். மாணிக்கம்	101.00
வழக்கறிஞர் கே. கனகராஜ்	50.00
கே. ஷேக் தாவுத்	50.00
12—12—68அன்று திருச்சியில் நடந்த அண்ணா சிகிச்சை நிதியளிப்புக் கூட்டத்தில் ரூ. 50-க்குக் குறைவாக 25, 20, 15, 10, 5, 2, 1 என்ற விகிதத்திலும் கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்களிடம் மேடையிலும், சுற்றுப்பயணத்தின்போது ஆங்காங்கு நிதியாகவும், மாலைக்குப் பதிலாகவும் தஞ்சை மாவட்டக் கழக அமைப்புக்கள் சார்பு துணை மன்றங்கள் ஆகியவற்ருலும் கழகத் தோழர்கள், பொதுமக்கள் ஆகியோராலும் கொடுக்கப்பட்ட மொத்தத் தொகை	10,721.01
ஆக மொத்தம்	ரூ. 26,725.51

சென்னையில் 'பாஞ்சாலங்குறிச்சி'ப் பொருட்காட்சி!

கட்டபொம்மன் காலத்துப் பொருட்களைக் காண வாய்ப்பு

சென்னை, டிச. 19—

"பாஞ்சாலங்குறிச்சியில் அகழ்வாராய்ச்சியில் கிடைத்த பொருள்களின் கண்காட்சி, சென்னை மவுண்ட் ரோடு சிறுவர் அரங்கில் உள்ள செய்தித் துறை அலுவலகத்தில் பொது மக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

"ஒரு வார காலத்திற்குக் காலை 10-மணிமுதல் மாலை 5-மணி வரை பொதுமக்கள் இதனைப் பார்வையிட அனுமதிக்கப்படுவார்கள்.

"இந்தக் கண்காட்சியில் கட்டபொம்மன் வாழ்ந்த அரண்மனையின் பல புகைப் படத் தோற்றங்களும், அவனுடைய மூதாதையர் உருவங்களும், பல நாணயங்களும், ஆபரணங்களும் இடம் பெற்றுள்ளன.

"கட்டபொம்மனின் கோட்டையை அழிக்க ஆங்கிலேயர் பயன்படுத்திய பீரங்கிக் குண்டுகளும், ஆங்கிலேயர் பயன்படுத்தியதாகக் கருதப்படும் மதுப் புட்டிகளும், பீங்கான் தட்டுகளும் இக்கண்காட்சியில் உள்ளன.

"பாண்டிய மன்னன் காலத்தில் சிறந்த துறைமுகமாக விளங்கிய கொற்கையில் தற்போது நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் சங்க காலத்து நாணயங்களும், மட் பாண்டங்களும், சங்கினால் செய்யப்பட்ட வளையல்களும், இடைக்கால -- பிற்கால பாண்டியர் நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன."

வரவு-செலவுத் திட்டத்தில் ஏற்பட்ட நிதிப் பற்றுக்குறை!

சமாளித்த விதம் பற்றிக் கூற மொரார்ஜி மறுப்பு

புதுடில்லி, டிச. 17—

இதுவரையில் எந்த அளவுக்குப் பற்றுக்குறை நிதி முறை பின்பற்றப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றிய விவரங்களைக் கூற நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய் கண்டிப்பாக மறுத்தார்; 'அப்படிச் செய்ய வேண்டியிருந்ததா என்பது நிதியாண்டின் முடிவில் தான் தெரியும்' என்ருர்.

"நடைமுதல் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 289 கோடிக்கான பற்றுக்குறை ஈடு செய்யப்படாமல் அப்படியே விடப்பட்டிருக்கிறது; அதற்கு அரசு என்ன செய்திருக்கிறது?" என்று உறுப்பினர்கள் பிடிவாதமாகக் கேட்டனர்.

"துண்டு விழும் இத்தொகையை ஈடுகட்டப் பல நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன; வரி வசூலைத் தீவிரப்படுத்துவது -- பலனில்லாத செலவுகளைக் கைவிடுவது போன்றவை மீது என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைக் குறிப்பாகச் சொன்னால், அவற்றை ஏய்ப்பதற்கு முயற்சி செய்யப்படுமாகையால், அந்த விவரங்களைக் கூற முடியாது" என்ருர்.

சி. சுப்பிரமணியம் காலத்து உருக்குப் பேர ஊழல்

ஏற்றுமதி கோட்டா ஒதுக்குவதில் சில கம்பெனிகளுக்குச் சலுகை

அமைச்சர்கள் இருவர் தப்பினர் -- அதிகாரிகள்மீது குற்றச்சாட்டு

புதுடில்லி, டிச. 17—

சர்க்கார் குழுச் சிபாரிசுப்படி, இரும்பு -- உருக்கு முன்னாள் கட்டுப்பாட்டு அதிகாரி ஏ. எஸ். பாம் மற்றும் சில அதிகாரிகள்மீது வழக்குகள் தயாரிப்பதற்காக உயர் அதிகாரி ஒருவரை மத்திய அரசு நியமித்திருக்கிறது.

உருக்குப் பேர மோசடியில் இந்த அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக சர்க்கார் குழு கண்டுபிடித்து, 'இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாம்' என பரிந்துரைத்திருந்தது.

நாடாளுமன்றத்தில், உருக்கு அமைச்சர் பி. சி. சேத்தி இத்தகவலை வெளியிட்டார்.

"ஐந்து அதிகாரிகளுக்கு குற்றப்பத்திரிகை தரப்பட்டிருக்கிறது; விரைவில் இன்னும் இருவருக்கு குற்றப்பத்திரிகை தரப்படும்" என அமைச்சர் கூறினார்.

"ஏ. எஸ். பாமுக்கு குற்றப்பத்திரிகை கொடுப்பதில் அரசு தாமதம் ஏதும் செய்யவில்லை" என அமைச்சர் தெளிவாக்கினார்.

உருக்குப் பேரத்தில் அமீன்சந்த் பியாரிலால், அப்பீஜே உட்பட 5 அல்லது 6 நிறுவனங்கள் சம்பந்தப்பட்டிருந்தன; இந்நிறுவனங்களுக்கு லைசென்சு, ஏற்றுமதி கோட்டா ஒதுக்குவதில் ஏ. எஸ். பாமும், சில அதிகாரிகளும் சலுகைகள் காட்டினர் என்பதே குற்றச்சாட்டு.

உருக்குப் பேர ஊழலில் பாதுகாப்புத் துறை அமைச்சர் சுவரண் சிங், சி. சுப்பிரமணியம் ஆகியோரும் சம்பந்தப்பட்டிருந்ததாகப் புகார்கள் கூறப்பட்டதை அமைச்சர் குறிப்பிட்டு, 'சர்க்கார் குழு, இவ்விருவருக்கும் இந்த ஊழலில் தொடர்பு இல்லை எனக் கூறிவிட்டது' எனத் தெரிவித்தார்.

"சில அமைச்சர்கள், காங்கிரசுத் தலைவர்களின் 'குட்டு' அம்பலமாகும் என்பதால், முன்னாள் உருக்குத் துறைச் செயலாளர் பூதலிங்கம் மீது அரசு நடவடிக்கை எடுக்கவில்லையா ?" எனச் சில உறுப்பினர்கள் வினவினர்.

"பூதலிங்கம் இராஜினமாச் செய்துவிட்டார்; ஆகையால் அவர்மீது நடவடிக்கை எடுக்க வழி இல்லை" என அமைச்சர் கூறினார்.

35,000 டிராக்டர்கள்

நடப்பு ஆண்டில் கிடைக்குமாம்

புதுடில்லி, டிச. 17—

'1968-69-ம் ஆண்டில் புதிதாக 35 000 டிராக்டர்கள் கிடைக்கும்' என்று தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் பக்ருதீன் அலி அகமது, நாடாளுமன்ற மேலவையில், கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

இதில் உள்நாட்டிலேயே 19,000 டிராக்டர் தயாராகலாம்; 16,000 டிராக்டர்கள் இறக்குமதியாகும்."

கள்ளக் குடியேற்றம்

பலருக்கு அபராதம்

சென்னை, டிச. 18—

இலங்கைக்குக் கள்ளத்தனமாகக் குடியேறுவதைத் தடுக்க கடந்த செப்டம்பர் திங்களில் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த மாதத்தில் 4 சோதனைகள் நடத்தப்பட்டன. ஐந்து கள்ளக் குடியேற்ற நபர்களும், 4 தரகர்களும், மூன்று படகோட்டிகளும் கைது செய்யப்பட்டனர்.

கள்ளக் குடியேற்றத்துக்குப் பயன்படுத்தப்பட்ட படகும் கைப்பற்றப்பட்டது.

கள்ளத்தனமாகக் குடியேறியதாக இலங்கை அரசால் திருப்பி அனுப்பப்பட்ட 4 பேர் இராமேசுவரம் வந்து சேர்ந்தனர்.

கள்ளக் குடியேற்ற நபர்கள் 8 பேருக்குத் தலா ரூ. 20-லிருந்து ரூ. 25 வரை அபராதம் விதிக்கப்பட்டது.

ஒரு கள்ளக் குடியேற்ற நபருக்கு ஒரு மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

6 தரகர்களுக்கு ரூ. 5-லிருந்து ரூ. 10. வரை அபராதம் விதிக்கப்பட்டது.

3 தரகர்களுக்கு ஒரு மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

தமிழகத்தில் டாக்டர்கள் பற்றுக்குறை ஏற்படாது

தேர்ச்சிபெருதவர்களை டாக்டர்களாக அங்கீகரிக்கும் நிலை வராது

மருத்துவத் துறையினர் அச்சம் நீங்க அமைச்சர் சாதிக் பாட்சா விளக்கம்

கோயமுத்தூர், டிச. 18—

"தேர்ச்சி பெருதவர்கள் டாக்டர் தொழில் நடத்துவதற்கு ஒப்புதல் அளிக்கத் தமிழக அரசு கருதவில்லை"

என்று சுகாதார அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, தெளிவுறக் கூறினர்.

"பார்மசிஸ்டுகளையும் கம்பவுண்டர்களையும் டாக்டர் தொழில் நடத்த ஒப்புதல் அளிக்க அரசு எண்ணியிருப்பதாக மருத்துவக் கல்லூரி மாணவர்கள், அவுஸ் சர்ஜன்கள் ஆகியவர்களிடமும், மருத்துவத் தொழிலில் உள்ள மற்றவர்களிடையேயும் நிலவும் அச்சத்தைப் போக்கும்பொருட்டு இதைக் கூறுகிறேன்" என்று அமைச்சர் சொன்னர்.

"இது சம்பந்தமாக மத்திய அரசு தெரிவித்த யோசனை ஒன்றை மாநில அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது" என்றும் அவர் கூறினர்.

கம்பவுண்டர்களையும், பார்மசிஸ்டுகளையும் டாக்டர்களாக அங்கீகரிப்பது அவசியம் இல்லை என்று முதலமைச்சர் அண்ணு கருதுவதாசவும் சொன்னர்.

தகுதி பெற்ற டாக்டர்கள் போதிய அளவுக்கு இருப்பதாகவும், கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் தேறிவரும்போது டாக்டர்களுடைய எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்றும் அண்ணு கருதுவதாகக் கூறினர்.

சித்த வைத்தியத்துக்கும் அரசு ஊக்கம் அளிப்பதாகவும், ஓமியோபதி வைத்திய முறையை அங்கீகரிப்பது பற்றி அரசு யோசித்துக் கொண்டிருப்பதாகவும் இதன் மூலம் மாநிலத்தில் டாக்டர்கள் பற்றுக்குறை ஏற்பட வழியிருக்காது என்றும் கூறினர்.

கருநாடக மாநில தி. மு. கழகம்

அமைப்பாளர் வேண்டுகோள்

'கருநாடக மாநிலத்தில் அண்மையில் நடைபெற்ற தேர்தலில் கீழ் அமைப்பு நிர்வாகப் பொறுப்புக்களிலிருந்து மேல் அமைப்பு நிர்வாகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர்கள் -- சட்டப்படி இரண்டில் ஒன்றை இராஜினமாச் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் -- உடனடியாகத் தங்கள் இராஜினமாக் கடிதங்களை மாநில அமைப்பாளருக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்; அதற்கான தேர்தல்கள், சனவரித் திங்கள் 5-ம் நாள் காலைமுதல் மாலை வரை நடைபெறும்; இடம், நேரம், ஆணையாளர் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்"

என்று கருநாடக மாநில அமைப்பாளர் தி. திராவிடமணி அறிவிக்கிருர்.

உணவு உற்பத்தியில் புரட்சி!

கிணறு வெட்ட உதவப் புதிய திட்டம்

பின்தங்கிய பகுதிகளுக்கு வாய்ப்பு --- அமைச்சர் செ. மாதவன் அறிவிப்பு

திருச்சி, டிச. 18—

தமிழகம் முழுவதும் -- குறிப்பாகப் பின்தங்கிய பகுதிகளில் பாசனக் கிணறுகள் வெட்டும் திட்டத்தைச் செயல்படுத்த மாநிலக் கூட்டுறவு மத்திய நில அடமான பாங்கிக்கு அவசியமாளுல் உதவி அளிப்பதாக 'போர்டு' நிறுவனம் அறிவித்துள்ளது.

இத்திட்டம் மற்ற கிணறு வெட்டும் திட்டங்களைப்போலல்லாமல் மாறுபட்டது. கிணறுகள் வெட்ட இடங்களைத் தேர்ந்தெடுப்பது -- கிணறு தோண்டும் இயந்திரங்கள் அளிப்பதுபோன்ற வேலைகளை நில அடமான பாங்கி மேற்கொள்ளும்.

யார் நிலத்தில் கிணறு வெட்டப்படுகிறதோ அவர், ஆட்களை அமர்த்தவேண்டும். செலவெல்லாம் கடனாகக் கருதப்பட்டு விவசாயியிடமிருந்து எளிய தவணைகளில் திரும்பப் பெறப்படும்.

இத்திட்டத்தை மேற்கொள்ள அரசு மிகவும் ஆவலாக இருப்பதாகக் கூட்டுறவு அமைச்சர் திரு. மாதவன் பூவாளூரில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

"இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால், மாநிலத்தில் உணவு உற்பத்தித் திட்டமே புரட்சிகரமாகிவிடும்; இத்திட்டம் விரைவில் மேற்கொள்ளப்படும்" என்றும் அமைச்சர் கூறினர்.

போர்டு நிறுவனத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப நிபுணர்கள் சில மாதங்களுக்குமுன்னல் தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்து மேற்கண்ட யோசனை கூறியதாக மத்திய நில அடமான பாங்கி துணைத் தலைவர் பி. பி. கே. ராஜா சிதம்பரம் கூறினர்.

தரைக்கடியிலுள்ள ஊற்றுக்களைக் கண்டுபிடிக்க மாநிலம் முழுவதும் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் வறட்சிப் பகுதிகளிலும் இறைவைப் பாசனத்தை நம்பியிருக்கும் பகுதிகளிலும் உள்ள விவசாயிகள் இத்திட்டத்தால் பெரும் பலன் அடைவரென்று கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பூவாளூர் கூட்டுறவு பண்டகசாலை வெள்ளி விழாக் கொண்டாட்டத்தில் அமைச்சர் மாதவன் பேசுகையில், 'நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் கடன் தொகை அடுத்த ஆண்டுமுதல் இரட்டிப்பாக்கப்படும்' என்ருர்.

புகுமுக வகுப்பு முடிவிலேயே மொழிப் புலமை

தமிழுக்கும் ஆங்கிலத்திற்கும் அதிக நேரம் ஒதுக்கலாம்

கல்வியமைச்சர் நெடுஞ்செழியன் யோசனை

மதுரை, டிச. 18—

"மாணவர்கள், கல்லூரி புகுமுக வகுப்பை முடித்துவிட்டு வெளி வரும்போது ஆங்கிலத்திலும், தமிழிலும் புலமை பெற்றுவிட்டிருக்கும் வகையில் பாடத் திட்டங்களைத் தயாரிக்குமாறு பல்கலைக் கழகத் துணைவேந்தர்களையும், மாநில கல்வித் துறையையும் கேட்டுக்கொண்டிருக்கிறேன்"

என்று கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

ஆங்கிலத்துக்கும், தமிழுக்கும் அதிக பீரியடுகள் ஒதுக்க வேண்டுமென்றும், இதற்காகப் பள்ளி நாட்களில் 30 அல்லது 40 நாட்கள் கூடுதலாக்கலாமென்றும் அமைச்சர் யோசனை கூறினர்.

கூடுமான அளவுக்கு அதிகபட்சமான அறிவியல் துறைச் சொற்களைத் தமிழில் மொழி பெயர்க்குமாறு மாணவர்களைக் கேட்டுக் கொண்டார்; எஞ்சிய சொற்களை அடுத்த தலைமுறை மாணவர்கள் மொழி பெயர்த்துக் கொள்ளுவார்கள் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

குடும்ப நலத் திட்ட விழா

குடும்ப நலத் திட்ட இரு வார விழாவை முன்னிட்டு 20—12—68 மாலை 6-30 மணிக்கு சென்னை பூங்கா நகர் அசோக விகாரில், மேயர் வேலூர் நாராயணன் தலைமையில், அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், எஸ். ஜே. சாதிக் பாட்சா, சட்டமன்ற உறுப்பினர் ஹண்டே, மாநகராட்சி உறுப்பினர்கள் பொ. கு. இராமதாஸ் ஆகியோர் பேசுவர்; கலை நிகழ்ச்சிகளும் உண்டு.

அரிசியுடன் கோதுமையையும் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும்

'புஞ்சைத் தானியங்களையும் புறக்கணிக்காதீர்'

ஊட்டச் சத்துமிக்க உணவு -- அமைச்சர் மதியழகன் வற்புறுத்தல்

கோயம்புத்தூர், டிச. 18—

"தமிழ் மக்கள் தமது உணவில் இன்னும் அதிகமாகக் கோதுமையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஏதோ ஒரு தற்காலிகமான அரிசிப் பற்றுக்குறையைச் சமாளிப்பதற்காக இதை நான் சொல்லவில்லை; இது நல்லதொரு சத்துணவாகும்; மற்றப் பகுதிகளில் உள்ளவர்களின் உணவு சீரானதாக இருப்பதால் அவர்கள் நல்ல ஆரோக்கியத்துடனிருக்கிருர்கள்; நாமும் நமது உணவுப் பழக்கங்களில் மாறுதல்கள் செய்யவேண்டும்"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், இங்கு குடும்பக் கலைக் கண்காட்சி ஒன்றைத் துவக்கி வைத்துப் பேசுகையில் கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது :—

"தமிழ்நாட்டில் 45 இலட்சம் டன்கள் அரிசி உற்பத்தி செய்யப்படுகிறது; இது நமது தேவைக்கு மட்டுமே போதுமானதாக இருக்கிறது.

இப்போது அரிசி சாப்பிடுவதென்பது நாகரீகத்தின் சின்னமாகக் கருதப்படுகிறது. கிராமப்புறப் பகுதிகளிலுள்ள பலர் ராகி, கோதுமை, கம்பு முதலிய தானியங்களைப் பயன்படுத்துவதைக் கைவிட்டுக் கொண்டிருக்கிருர்கள்.

அரிசியை மட்டுமே பயன்படுத்துவதை மாற்றிக்கொண்டு, மற்ற தானியங்களையும் காய்கறிகளையும் சேர்த்துக்கொள்ளுவது எவ்வளவு நல்லது என்பதை, குடும்பக் கலை வல்லுநர்கள் மக்களுக்கு உணர்த்தினல், நாட்டின் பொருளாதாரத்திற்கு மட்டுமன்றி மக்களின் சுகாதாரத்திற்கும் உதவி செய்தவர்கள் ஆவார்கள்."

வருந்துகிறோம்

பழம் பெரும் இயக்கத் தோழரும், அறிஞர் அண்ணவின் நெருங்கிய நண்பருமான திரு. சி. வே. சுப்பராயன் தமது 70-வது வயதில், திருவத்திபுரம் தமது இல்லத்தில் இயற்கையெய்தினர்.

அன்னரின் மறைவால் துயருறும், குடும்பத்தாருக்கும் நண்பர்கட்கும், எமது ஆழ்ந்த பரிவும் ஆறுதலும் உரித்தாகுக.

—ஆசிரியர்

சென்னைத் தொழில் நுட்பக் கழகத்துக்கு ஆபத்து

மத்திய கழகத்துடன் இணைத்துவிட முயற்சி

தடுத்து நிறுத்த டில்லிக்கு தூதுக் குழு செல்லும்

சென்னை, டிச. 19—

தமிழக அரசுப் பிரதிநிதிகள், குரோம்பேட்டையிலுள்ள சென்னைத் தொழில் நுட்பக் கழக (எம்.ஐ.டி.) பிரதிநிதிகள் உள்ளிட்ட ஒரு குழு மத்திய அரசைச் சந்தித்து, சென்னைத் தொழில் நுட்பக் கழகத்திற்குத் தற்போதுள்ள தனிச் சிறப்பைக் காத்து வர வேண்டும் என்று வற்புறுத்தும்.

இந்தக் கழகத்தின் செலவில் பெரும் பகுதியை மத்திய அரசு ஏற்றுவருகிறது.

இந்தக் கழகத்தை (எம்.ஐ.டி.) இந்திய தொழில் நுட்பக் கழகத்துடன் (ஐ.ஐ.டி.) இணைக்க வேண்டும்; அல்லது இந்தக் கழகத்துக்கு ஆகும் செலவில் பாதியை மாநில அரசு ஏற்கவேண்டும் என்று மத்திய அரசு தற்போது கூறியுள்ளது; ஆகவே, மாநில அரசும் சென்னைத் தொழில்நுட்பக் கழகமும் மத்திய அரசைக் கண்டு அவ்வாறு வற்புறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

தமிழக அரசும் -- எம். ஐ. டி. நிர்வாகமும், இந்தியத் தொழில் நுட்பக் கழகத்துடன் எம். ஐ. டி.-யை இணைக்கும் யோசனையை எதிர்த்துள்ளன.

எம்.ஐ.டி. நிர்வாக தூதுக் குழு எச். வி. ஆர். அய்யங்கார் தலைமையில் கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியனைக் கண்டு விவாதித்தது.

மத்திய அரசிடம் தூதுக் குழு ஒன்றை அனுப்புவதென்று அப்போது தீர்மானிக்கப்பட்டது.

அறிஞர் அண்ணா

சிகிச்சை நிதி

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்காகத் தொகை அனுப்புமாறு கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப நிதியளித்த தோழர்கள்:—

		ரூ. காசு
18-12-68 இதழ்த் தொடர்ச்சி		1,13,242.21
சேலம் நகரில் 12–12–68 புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் கலந்துகொண்ட சிகிச்சை நிதியளிப்புக் கூட்டத்தில் அளிக்கப்பட்ட நிதி—மாவட்டச் செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் மூலம்:—		
நுழைவுக் கட்டண வசூல்	4,500.00	
எம்.ஜி.ஆர். அவர்களிடம் மேடையில் தோழர்களால் அளிக்கப்பட்ட தொகை (விவரம் தனியாக)	2,513.00	7,013.00
திண்டுக்கல் நீ. அன்புச்செழியன் எம்.பி.		501 00
கள்ளக்குறிச்சி மு. தெய்வீகன் எம்.பி.		501.00
சென்னை அசோக் லேலண்டு தி. மு. க. தொழிலாளர்கள் சார்பாக		530.10
தமிழக அரசு அச்சகத் தொழிலாளர்கள் சார்பாக 177 தோழர்கள்		238.00
கோவை பிள்ளையப்பம்பாளையம் ஆ. சண்முகம்		50.00
சென்னை -- இராயபுரம் பனைமரத்தொட்டி மக்கள் மன்றம் சார்பாக		20.00
சென்னை 28-வது வட்ட மாநகராட்சி உறுப்பினர் என். வி. என். சோமு (இரண்டாம் தவணை)		26.00
சென்னை--எண்ணூர் பவுண்ட்ரிஸ் தி. மு. க. தொழிலாளர் குழு		50.00
சென்னை-1 வடக்கு பீச் ரோடு சிறுகடை வியாபாரிகள் முன்னேற்றச் சங்கச் சார்பில்—14-வது வட்ட தி. மு. க. செயலாளர் சி. தருமலிங்கம் மூலம்		101.00
பம்பாய்–தாராவியில் 15–12–68-ல் நடைபெற்ற அழகியபாண்டியபுரம் தோழர் முத்து – அம்பிகாபதி ஆண் மகவுக்குப் பெயரிடு விழாவில் பெயரிடப்பட்டதின் நினைவாக அளிக்கப்பட்ட தொகை – த. மு. பொற்கோ மூலம்		15.00
தியாகதுருகம் எஸ். பி. கருப்பண்ணன் மூலம் தோழர்கள்		55.00
நாகர்கோவில்–கோட்டாறு பி. வீரபத்திரபிள்ளை		50.00
குமரி திங்கள்சந்தை ஆச்சாதித்தன்விளை அறிஞர் அண்ணா மன்றம்		50.00
மாரியம்மன்கோவில் அரசினர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் குழு		40.00
மத்தூர் ஊராட்சிமன்றத் தலைவர் எம். எஸ். கோவிந்தராசன்		25 00
கடையநல்லூர் கே. எஸ். மனோகரன்		25.00
சோளிங்கர் மோகனா கிளினிக் டாக்டர் பி. கண்ணப்பன்		25 00
முதுகுளத்தூர்–மீசல் கா. சேது		25.00
சென்னை-48 ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி எலக்டிரிகல் பகுதித் தோழர்கள் சார்பாக—துரைராசன் மூலம்		25.00
காஞ்சிபுரம் ராஜாஜி மார்க்கெட் கே. எஸ். வெங்கடேசன்		21.00
முகலிவாக்கம் தி. மு. க. கிளை சார்பாக		11.00
இராசிபுரம் டி. சின்னுசாமி		10.00
மதுரை-1 டீ ஸ்டால் எம். பி. என். இராசு		10.00
பவானி வட்டம் அய்யம்பன்வலசு தி. மு. க. கிளை		10.00
கடலூர்--புதுப்பாளையம் மு. சீனிவாசன்		10.00
விக்கிரவாண்டி அரசினர் உயர்நிலைப் பள்ளி 11-வது வகுப்பு மாணவர்கள்		10.00
அனைத்தலையூர் (நெல்லை) ஆ. சுப்பையா		10.00
அம்பாசமுத்திரம் த. சிதம்பரம்		10.00
கொடைக்கானல் பி. என். மாயத் தேவர்		10.00
புதுப்பட்டி கே. என். காளியப்பன்		10.00
வேலூர் 7-வது வட்டம் பொ. ஆறுமுகம்		10.00
திண்டுக்கல் எம். அப்துல் பாரி		10.00
புதுவை நகர அவைத் தலைவர் கோ. பாண்டியன்		10.00
மண்டைக்காடு (குமரி) டி. பாலையா		10.00
போளூர் பி. பரந்தாமன்		7.00
கீழாரால் அ. சோ. கி. பாண்டியன்		6.00
சிங்கம்புணரி கே. செல்வம்		5.55
திருச்சி-11 மே. க. கோட்டை எஸ். கந்தசாமி		5 00
விருத்தாசலம் கே. கே. மாரியப்பன்		5.00
சென்னை-28 முள்ளிக்குப்பம் -- மு. பாலசுந்தரம்		5.00
சென்னை-1 சி. பாலசுப்பிரமணியன்		5.00
கோட்டூர் கிளை கே. வி. சொக்கலிங்கம்		5.00
இரணியல் கே. இராமசாமி		5.00
தொகரப்பள்ளி பி. சின்னசாமி		5.00
கொடைக்கானல் நாயுடுபுரம் பி. என். மாயத்தேவன்		5.00
காட்டூர்–திருவாரூர் டாக்டர் ஹாஜா மொய்தீன்		5.00
திருச்சி-8 மேலக்காசிபாளையம் ஆர். பழனியம்மாள்		5.00
தாண்டிக்குடி அ. க. மகாலிங்கம்		5.00
கணக்கன்பட்டி எம். மீனமணாளன்		5.00
திருவாரூர் எம். கே. என். ஜான்		5.00
பட்டுக்கோட்டை இ. சுப்பிரமணியம்		5.00
இராசிபுரம் பி. கே. பி. சுப்பராய செட்டி		5.00
,, இ. டி. சண்முகம்		5.00
,, எஸ். கே. ஏ. நாராயணன்		5.00

ரூ. 3 வீதம் அனுப்பிவைத்தோர்:

விளந்தை ஆ. சின்னதம்பி உடையார் (3.61), மதுரை-2 எம். முனுசாமி, மதுரை-2 எஸ். ஆறுமுகம் ஆகிய 3 பேர்	9.61
கூத்தூர் தோழர்கள்—பாப்பையன், கருப்பசாமி, பெருமாள், சுப்பையா, ஆர். பெருமாள், வேலுச்சாமி, கடாச்சரம், குருசாமி, மாரியப்பன் ஆகியோர்	10.00

ரூ. 2 வீதம் அனுப்பிவைத்தோர்:

நெல்லியந்தல்பட்டி பாண்டி அம்பலம், களிமங்கலம் எம். பாண்டியன், மதுரை என். வேலாயுதம், அரசநகரி குத்தூஸ் அலிம் சாயபு, ஆகிய 4 பேர்	8.00

ரூ. 1 வீதம் அனுப்பிவைத்தோர்:

திருச்சி-10 மு. பழனிசாமி, கே. கந்தசாமி, எம். சேது, கே. நாராயணன், ஆர். மருதமுத்து, சின்னமனூர் ச. மு. சுப்பிரமணியன், மேல்நாரியப்பனூர் எஸ். மாணிக்கம் பிள்ளை ஆகிய 7 பேர்	7.00
ந. வீராசாமி எம்.எல்.ஏ. (ஆற்காடு தொகுதி)	251 00
நெல்லை நாகுப்பிள்ளை	501.00
சென்னை சிந்தனையாளர் மன்றம்	222.00
ஆக மொத்தம்	1,23,881.47

நடக்க இருப்பவை

21--12--68

போளூர்

வட்ட தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு பழைய பஸ் நிலையத்தில்; தலைவர்: அ. முனுசாமி; பேசுவோர்: நன்னிலம்நடராசன், எஸ். முருகையன் எம்.எல்.ஏ., ஜி. விசுவநாதன் எம்.பி., எஸ். குப்பம்மாள் எம்.எல்.ஏ., அரூர் முத்து எம்.பி., தொ.ப. சீனிவாசன், பெ.சு. திருவேங்கடம், பி. கிருட்டிணன், ப. பரந்தாமன், ஆர். சின்னகுழந்தை, எஸ். ஆர், அபீஸ், சி.டி. கோவிந்தன், கே.ஆர். அண்ணாமலை, ஞானசேகரன், கே. கோவிந்தசாமி, ஏ.சி, பெருமாள், மொழியாளன், சிவசிங்கம்.

மதுரை 40-வது வட்டம்

தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு கிருதமால் நதி ரோடில்; பேசுவோர்: எஸ். காமராஜ், எம். ஆர். கணேசன், கு. திருப்பதி, என். நாராயணசாமி, எஸ். மாணிக்கம், மற்றும் பலர்.

திருவள்ளுவர் 2,000 ஆண்டு விழா

சென்னையில் கருத்தறிவிப்புக் கூட்டம்

'உலகப் பொதுமறை' தந்த செந்நாப் புலவர் திருவள்ளுவர் தோன்றி இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகின்றன.

தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் அழியாப் பெரும் புகழ் தந்த அப் பேரறிவுப் பெருந்தகைக்குச் சிறப்பு விழா எடுப்பதை முன்னிட்டு 21–12–68 காலை 9-மணிக்கு சென்னை -- மவுண்ட் ரோடு, 150-ஏ எண்ணுள்ள மாவட்ட நடுவண் நூலகத்தில் கருத்து அறிவிப்புக் கூட்டம், தமிழகக் கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

"அறிஞர் பெருமக்களும் கூட்டத்திற்கு வருகை தந்து நாடெங்கும் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுதற்குச் சிறந்த கருத்துக்களை வழங்குமாறு விரும்பி வேண்டிக்கொள்கிறோம்" என்று அமைப்பாளர்களான கி. ஆ. பெ. விசுவநாதம், வ. சுப்பையா, சலகை ப. கண்ணன் ஆகியோர் அறிவிக்கின்றனர்.

தர்மாம்பாள் மகளிர் இலக்கிய வகுப்பு

சென்னை நக்கீரர் கழகச் சார்பில் டாக்டர் தர்மாம்பாள் மகளிர் இலக்கிய வகுப்பு 21—12—68 பிற்பகல் 3-மணிக்கு நடைபெறும்; 'சமூகவியல்' பற்றி எஸ். பி. சற்குணம் பி.ஏ. சொற்பொழிவாற்றுவார்; இடம்: 27, பிள்ளையார் கோயில் தெரு, தண்டையார்பேட்டை, சென்னை-21.

நகராட்சி மன்றத் தேர்தல்

திருச்சி மாவட்ட ஆய்வுக் குழு சுற்றுப்பயணம்

"திருச்சி மாவட்டத்தில் நகராட்சிமன்றத் தேர்தலுக்கான கழக வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கென்று அமைக்கப்பட்ட ஆய்வுக் குழு, தனது சுற்றுப்பயணத்தைக் கீழ்க்கண்ட விவரப்படி மேற்கொள்ள இருக்கிறது.

"சுற்றுப்பயணத்திற்கான ஏற்பாடுகளைச் சம்பந்தப்பட்ட நகரச் செயலாளர் கவனிக்கவேண்டும்.

"ஆய்வுக் குழுவிடம் வேட்பாளர் ஒவ்வொருவரும் ரூ. 25 செலுத்தி வேட்பு மனுக் கொடுக்கவேண்டும்; அதற்கான விண்ணப்பத் தாள்கள், ஆய்வு நடத்தப்படுகிற நேரத்தில் தரப்படும்.

"வேட்பாளர்கள் ஆய்வுக் குழுவினிடத்தில் தங்களது கருத்துக்களைத் தெரிவித்தால் போதுமானது; ஆதரவாளர்கள் எவரையும் அழைத்து வரவேண்டாம்"

என்று மாவட்டச் செயலாளர் திரு. அன்பில் தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

ஆய்வுக் குழுவுக்கு தோழர் ஜி. பராங்குசம் எம்.எல்.சி. தலைவராகவும், தோழர்கள் எம். எஸ். வெங்கடாசலம், கே. வீரையா, எம். கந்தசாமி எம்.எல்.ஏ., கு. காமாட்சி ஆகியோர் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

குழுவின் சுற்றுப்பயண விபரம்:—

டிச. 22, 23: புதுக்கோட்டை; 24: மணப்பாறை; 25, 26: கரூர்; 29: திருவரங்கம்; 30, 31: திருச்சி.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தல் முறை மாறும்?

பொள்ளாச்சி, டிச. 19—

ரூ. 20000 செலவில் ஆனைமலை ஊராட்சி ஒன்றியம் சார்பில் கட்டப்பட்ட விவசாயக் கிடங்கை வேளாண்மை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி திறந்து வைத்துப் பேசுகையில், ஒன்றியத் தலைவரை மக்களே தேர்ந்தெடுக்கும் முறையை அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறதென்றும், மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்துக்குத் தலைவராக மாவட்ட கலெக்டருக்குப் பதிலாக தேர்தல்மூலம் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் முறை ஆந்திரத்திலும், இராஜஸ்தானிலும் இருந்துவருவதாகவும், இந்த மாநிலத்திலும் அவ்வாறே செய்யலாமா என்பதையும் அரசு பரிசிலித்து வருகிறதென்றும் கூறினார்.

Madras State Electricity Board

TENDER NOTICE

Sealed tenders are invited upto 3 P.M. on 28—12—68 for clearing and booking of materials including transport for a period of one year.

I. (a) From Pasumalai Railway Station to Pasumalai Central Stores of the Madras State Electricity Board and Vice-Versa.

(b) From Madurai Railway Station to Pasumalai Central Stores of the Madras State Electricity Board and Vice-Versa.

(c) From any of the Lorry sheds at Madurai to Pasumalai Central Stores of the Madras State Electricity Board and Vice-Versa.

II. (a) Stacking of materials at Central Stores, Pasumalai duly sorted lengthwise, sizewise etc., in a proper manner, susceptible of easy check as directed by the Madras State Electricity Board authorities, WITHOUT WEIGHMENT.

(b) Stacking of materials at Central Stores, Pasumalai duly sorted lengthwise, sizewise etc., in a proper manner susceptible of easy check as directed by the Madras State Electricity Board authorities, INCLUDING WEIGHMENT.

Separate tenders should be submitted for items I and II.

Detailed Tender Notice, tender form and tender conditions can be had from the Office of the Superintending Engineer, Madurai Electricity System, Kosakulam Pudur Post, Madurai-7 on payment of Rs. 5. per set by cash. This amount is not refundable on any account.

The tender documents will be available for sale at this office on any working day after 19—12—1968.

SUPERINTENDING ENGINEER
Madurai Electricity
System

சென்னை மாநகராட்சி மத்தியக் குழு

சென்னை, டிச. 18—

சென்னை மாநகராட்சியின் மத்தியக் குழுவுக்கான உறுப்பினர்கள் தேர்தல் இன்று நடந்தது.

ஒவ்வொரு வட்டக் குழுவும் கூடி மத்தியக் குழுவுக்கான உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தது.

மொத்தம் உள்ள 12 வட்டக் குழுக்களில் 7 குழுக்களுக்கான தேர்தல்கள் முடிந்துவிட்டன; தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம்:—

முதல் வட்டம்:—டி. வெங்கடேசன் (10-வட்ட உறுப்பினர்).

3-வது வட்டம்:—ஜே. எத்திராசன் (27-வது வட்ட உறுப்பினர்).

5-வது வட்டம்:—வி. தணிகாசலம் (43-வது வட்ட உறுப்பினர்).

6-வது வட்டம்:—மைனர் மோசஸ் (58-வது வட்ட உறுப்பினர்).

8-வது வட்டம்:—சையத் கலியத்துல்லா (75-வது வட்ட முஸ்லிம் லீக் உறுப்பினர்).

10-வது வட்டம்—எஸ்.வி. வேலு (91-வது வட்ட உறுப்பினர்).

12-வது வட்டம்:—ஆர். டி. பாஸ்கரன் (120-வது வட்ட உறுப்பினர்).

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.